பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 08 | புதன்கிழமை | 24.07.2024 | கதிர் 259

# கறுப்பு ஜூலை இலங்கையின் பெரும் இருண்ட அத்தியாயம்

## கனடா பிரதமர் அறிக்கை

கறுப்பு ஜூலையின் 41ஆவது வருடத்தை குறிக்கும் விதத்தில் கனடடா பிரதமர் ஜஸ்டின் ரூட்டோ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கறுப்பு -ஜூலை இலங்கையின்இருண்டஅத்தியாயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

41 வருடங்களிற்கு முன்னர் இன்றைய தினம் இலங்கையின் கொழும்பில்தமிழ்பொதுமக்களையும்அவர்களது வர்த்தகநிலையங்களையும் இலக்குவைத்து தாக்குதல்கள் ஆரம்பமாகின.

ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் இழக்கப்பட்டன, பல தமிழர்கள் காயமடைந்தனர், பலர் பாலியல் வன்முறைகளிற்கு இலக்கானார்கள், ☞ 2

### அரச ஊழியர்களின்

## சம்பளத் திருத்தத்துக்கான முன்மொழிவுக்கு கோரிக்கை

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான முன்மொழிவுகளைக் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதிஅலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.presidentsoffice.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும். அனைத்து முன்மொழிவுகளையும் MS Word இல் Iskoola Pota எழுத்துருவில் 12அளவில் அதன் மென் பிரதியை Pdf வடிவில் மாத்திரம்தயாரித்து ☞ 8

### ஜூலைக் கலவரங்களுக்காக

## தமிழரிடம் மன்னிப்புகேட்ட நீதி அமைச்சர் விஜயதாச

1983 ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி இலங்கைக்கு கரும் புள்ளியாக காணப்படுகிறது. 41 வருடங்களுக்கு முன்னர் நேர்ந்த சம்பவங்கள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தின. அக்காலப்பகுதியில் நாங்கள் அரசியலில் ஈடுபடவில்லை. இருப்பினும் நாட்டு பிரஜை என்ற ரீதியில் தமிழர்களிடம் மன்னிப்பு கோருகிறேன் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குடியியல்நடவடிக்கைமுறைச்சட்டக் கோவை(திருத்தச்)சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் ஊடாக தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன. நிறைவேற்றுத்துறையின் ஒருசில அதிகாரங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாக்கப்பட் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை முன்னிறுத்தி 7 தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கையெழுத்திட்டன. இந்த நிகழ்வுக்கு மக்களின் பேரெழுச்சியான ஆதரவு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பே பொதுவேட்பாளர் தொடர்பான ஆரவாரங்கள் தொடங்கப்பட்டபோது இருந்தது. வரலாற்றின் பக்கங்களை வண்ணங்களால் நிரப்பக்கூடிய ஒரு பெரும் நிகழ்வாக இது அமையலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அன்றைய நிகழ்வில் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் வேறு சிலருமாக மிகக்குறைவானவர்களே நிகழ்வில் கலந்துகொண்டார்கள். அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள காரியத்திற்கானமக்களைஆதரவைத் திரட்டுவதின் முன்னுள்ள சவாலை உணர்த்துவதாக அது இருந்தது.

அதுமட்டுமல்ல இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையில் அது ஏன் உருவாக்கப்படுகின்றது என்பதற்காக முன்னர் சொன்ன எந்தவொரு விளக்கமும் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலைக் கையாளும் வகையிலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதும்தான் இந்த உடன்படிக்கையில் முக்கியமாகக் ☞ 2

## நிகழ்நிலை காப்பு சட்டத்தில் திருத்தம்

2024 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்ததாவது:

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளதீர்மானத்திற்கிணங்க, குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச்சட்டம் தற்போது வலுவுடையதாக உள்ளது.

சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குமுன்னரேதுறைசார் நிபுணர்களால் சட்டமூலத்தின் ☞ 2

## இறுதிச் சடங்குகளுக்கான புதிய சட்டத்துக்கு அனுமதி

மதச் சடங்குகளுக்கமைய பூதவுடல்கள் நல்லடக்கம் மற்றும் தகனஞ் செய்தல் தொடர்பான உத்தேச சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அரச தகவல் திணைக் களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை செய்தியாளர் சந்திப்பில் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

கொவிட் - 19 தொற்றுநோய்க் காலப் பகுதியில் சிகிச்சை முகாமைத்துவம் தொடர்பாக சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டவழிகாட்டல்களில் குறிப்பிட்டவாறு, வைரஸ் தொற்றுக்குள்ளாகி இறந்தவர்களின் பூதவுடல்கள் தகனஞ் செய்தல் கட்டாயமாக்கப்பட்டது. இத்தீர்மானம் பல்வேறு மதக் குழுக்களையும், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும், குறிப்பாக இஸ்லாமியர்களின் மனம் புண்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

அது தொடர்பாகப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கற்கைகளின் பிரகாரம், ☞ 8

## முஸ்லிம்களிடம் மன்னிப்பு கோரவுள்ளது ஆளும்தரப்பு

### கொவிட்டால் இறந்தோரை எரித்ததற்காக

கொவிட் - 19 தொற்றுநோய்க்காலத்தில் முஸ்லிம்களின்உடல்கள் கட்டாயமாகத் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமானகலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச ☞ 2

## வங்கிகளில் ஆபரணங்களை அடகு வைத்தோருக்கு சலுகை

வங்கிகளில் தங்க ஆபரணங்களை அடகு வைத்த நபர்களுக்கு சலுகை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அரசதகவல்திணைக் களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இதனை அறிவித்தார்.

கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய கடுமையான பொருளாதார நெருக்கடியில்அனைத்து பிரிவுகளும் நேரடியாக அல்லது மறைமுகமாக பாதகமான தாக்கத்துக்கு உள்ளானார்கள். அதன் விளைவாக தங்க நகைகளை அடகுவைத்தல் வேகமாக அதிகரித்துள்ளது.

2019 ஆண்டில் ரூபா 210 பில்லியன் அளவிலிருந்த அடகு முற்பணநிலுவைத் ☞ 2

### பெருந்தோட்ட தொழிலாளர்களின்

## சம்பள அதிகரிப்பு வர்த்தமானி ரத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து தொழில் அமைச்சின் செயலாளர் வெளியிட்டிருந்த அதிவிசேட வர்த்தமானி இரத்து செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 21ஆம் திகதி தம்மால் வெளியிடப்பட்ட வர்த்தமானி இரத்து செய்யப்படுவதாக தெரிவித்து தொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ.விமலவீர இம்மாதம் 10ஆம் திகதியிடப்பட்ட புதிய அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர் ☞ 2

## ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பரில் வரும்

### அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் மாதம் நடத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில்நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கு தேவையான 10 மில்லியன் ரூபா வரவு,செலவுத் திட்ட ஆவணத்திலேயே ஒதுக்கப்பட்டுள்ளது. 2 தேர்தல்களை நடத்துவதற்கு அரசிடம் தற்போது பணமில்லை. அதனால் இந்த வருடம் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறாது. நாடாளுமன்றம் ☞ 8

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தடை ஏற்படுத்தப்படாது

### ராஜாங்க அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

ஜனாதிபதிதேர்தலை நடத்துவதற்கு ஆளும் தரப்பால் எந்தவகையிலும் தடைகளை ஏற்படுத்தப்போவதில்லை. ஜனாதிபதி தேர்தலை நிச்சயமாக நடத்துவோம் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுநிலையியற் ☞ 2

## இனி இது .....

குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவிர இந்தக் கட்டமைப்பு எப்படிச் செயற்படும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜூன் 30 வவுனியாவில் நடந்த கூட்டத்தில் இந்தப் பொதுக் கட்டமைப்பே அதன் நோக்கம் குறித்துத் தீர்மானிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. அதிலிருந்து புரிநந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட மூன்று வாரத்திற்குள் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து பொதுக் கட்டமைப்பின் நோக்கத்தை உருவாக்க முடியவில்லை என்பது உடன்படிக்கையில் தெரிகின்றது.

சரி அது போகட்டும், இந்தப் பொதுக் கட்டமைப்பின் அடிப்படை நோக்கம் தமிழ் மக்களை ஒரு தேசமாகத்திரட்டுதல் என்று முன்னர் சொல்லப்பட்டது. தமிழ் மக்களைத் தேசமாகத்திரட்டுதல் என்றால் அதில் வடக்கு கிழக்கு இரண்டும் தவிர்க்க முடியாதவை. முக்கியமாகக்கிழக்குத் தவிர்க்க முடியாதது. ஆனால், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நிகழ்வில் கிழக்குத்தலைவர்களைக் காணவில்லை.

பொதுக் கட்டமைப்பில் உள்ளவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் வடக்கைச் சேர்ந்தவர்களே. அரசியல்கட்சிகளின் சார்பில் இந்தப்பொதுக்கட்டமைப்பில் இடம்பெற்றிருப்பவர்கள் அனைவரும் வடக்கைச் சேர்ந்தவர்கள். ரெலோவின் அடைக்கலநாதன், புளொட்டின் சித்தார்த்தன், ஈ பி ஆர் எல் எவ் வின் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் கூட்டணியின் விக்னேஸ்வரன், தமிழ்தேசியக்கட்சியின் சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வேந்தன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஐங்கரநேசன் என்று 7 கட்சிகளின் தலைவர்களும் வடக்கைச் சேர்ந்தவர்கள். அதிலும் இந்த 7 பேரில் குறைந்தது ஐவராவது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டவர்கள். மறுபுறத்தில் தமிழ்பொதுச்சபையின் சார்பில் பொதுக் கட்டமைப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களிலும் பெரும்பான்மையானவர்கள் வடக்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அரசியல் சமூக செயற்பாட்டாளர் வசந்தராஜா, சட்டத்தரணி யோதிலிங்கம், அரசறிவியல்துறை பேராசிரியர் கணேசலிங்கம், அரசியல் சமூக செயற்பாட்டாளர் விக்னேஸ்வரன், அரசியல் விமர்சகர் ஜிதேந்திரா, நிலாந்தன் ஆகியோரே அந்த 7 பேரும். இவர்களில் இருவரைத் தவிர ஏனையோர் வடக்கைச் சேர்ந்தவர்கள். ஆகமொத்தத்தில் பொதுக் கட்டமைப்பின் தலைமைப் பீடத்தில் உள்ள 14 பேரில் 12 பேர் வடக்கைச் சேர்ந்தவர்கள். இந்த லட்சணத்தில் வடக்கு கிழக்கு மக்களை இணைத்து இந்த அமைப்பு எப்படி தேசத்தைக் கட்டியெழுப்பப் போகின்றது என்பது பெருங்கேள்வி.

அதுமட்டுமல்ல நிகழ்வுக்கு வந்திருந்தவர்களில்கூட கிழக்கத் தலைகளைக் காணவில்லை. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தவிர வேறு எவரும் நிகழ்வுக்கு வருகை தரவில்லை என்பது வேறுகதை. இருந்தாலும் இந்தப் பொதுக் கட்டமைப்பு தமிழர்களைத் தேசமாக ஒன்று திட்டுவது என்கிற நோக்கத்தைக் கொண்டிருக்கின்றது என்றால் பொதுக் கட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில் அந்தந்தக் கட்சிகளின் கிழக்குத் தலைவர்கள் அதில் பங்கெடுத்திருக்க வேண்டியது அவசியம் அல்லவா. ரெலோவின் செயலாளர் நாயகம் கிழக்கைச் சேர்ந்தவர். அவரும்கூட இந்த நிகழ்வில் இல்லை.

தந்தை செல்வா தமிழ் பேசும் மக்கள் எல்லோரையும் ஒன்று திரட்டவேண்டும் என்று நினைத்தார். அதிலிருந்து, முஸ்லிம்கள் முதலில் விலகினர். தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தமது பிரச்சினைகளும் வேறு வேறானவை எனவே தமிழ் அரசின் அரசியல் போக்குடன் தமது அரசியலை இணைத்துச் செல்ல முடியாது என்றுகூறி அவர்கள் தனியாகினர். அதேபோன்று வடக்கு கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகள் வேறு மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் வேறு என்று கூறி தொண்டமானும் பின்னர் விலகிச் சென்றார். அதன் பின்னர் அந்த இரு சமூகங்களும் தம்மைத் தனித் தனி இனங்களாக கூர்மைப்படுத்திக்கொண்டன.

இப்போது பொதுக் கட்டமைப்பு என்ற பெயரில் வடக்கு தமிழர்களை அதிலும் யாழ்ப்பாணத்தமிழர்களைக் கொண்ட இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிகழ்வில் கிழக்குத் தலைவர்களோ அல்லது அங்குள்ள வெகுஜனப் பிரதிநிதிகளோ பங்கெடுக்கவில்லை. நாளை, முஸ்லிம்களைப்போன்றும் மலையகத் தமிழர்களைப் போன்றும் வடக்குத் தமிழர்களின் பிரச்சினை வேறு கிழக்குத் தமிழர்களின் பிரச்சினை வேறு என்று கூறி அவர்களும் தனியே செல்வதற்கான அடித்தளத்தை இந்தப் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்திவிடுமோ என்கிற அச்சம் அந்த நிகழ்வைப் பார்த்தபோது ஏற்பட்டதைத்தவிர்க்க முடியவில்லை.

என்னதான் உன்னத நோக்கம் என்று கூறிக்கொண்டாலும் அதை அடைவதற்கான வழிவகைகள் தெளிவாகவும் தீர்க்கமாகவும் இல்லையெனில் அது அதற்கு முற்றிலும் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்திவிடும். அதுபோன்றே இந்தப் பொதுக்கட்டமைப்பும் யாழ்ப்பாணத்தவர்களுடையது என்று ஏனையவர்களால் புறமொதுக்கப்பட்டு வடக்குத் தமிழர்களின் அதாவது யாழ்ப்பாணத் தமிழர்களின் பிரச்சினை வேறு மற்றையவர்களின் பிரச்சினை வேறு என்று தமிழ்ச் சமூகம் மேலும் கூறுகளாகப் பிரிந்து பிளவுபட்டு நிற்பதற்கான அச்சாணியாகப் பொதுக் கட்டமைப்பு காலூன்றிவிடுமோ என்கிற அச்சத்தைத் தவிர்க்க முடியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிலிருந்து தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கறுப்பு ஜூலை எனப்படும் தமிழர்களிற்கு எதிரான இனக்கலவரம், பதற்றங்களை அதிகரித்தது. அது பின்னர் தசாப்தகால ஆயுதமோதலாக பரிணமித்தது.

இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக அது விளங்குகின்றது. 2022 மே 18 தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினம் என அங்கீகரிக்கும் தீர்மானத்தை கனடாவின் நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டதுநிறைவேற்றியது.

இந்த அர்த்தமற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்ட வர்கள் மற்றும் தப்பிப்பிழைத்தவர்களை நினைவுகூர்வதில் கனடாவின் அர்ப்பணிப்பையும் தமிழர்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள தமிழ் சமூகத்தினருடன் உள்ள ஐக்கியத்தையும் வெளிப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

மனித உரிமைகளின் உறுதியான பாதுகாவலன் என்ற அடிப்படையில் இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் குறித்து பொறுப்புக்கூறவேண்டும் என்று கனடா தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கும்.

கறுப்பு ஜூலையின் பின்னர் 1800 தமிழர்கள் கனடாவிற்கு வருவதற்கும் தங்களினதும் தங்கள் குடும்பங்களினதும் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் தேவையான விசேட நடவடிக்கைகளை கனடா எடுத்தது.

உலகில் அதிகளவு புலம்பெயர் தமிழர்கள் தற்போது கனடாவிலேயே வாழ்கின்றனர், ஒவ்வொரு நாளும் அவர்கள் எங்கள் சமூகத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பை நாங்கள் கொண்டாடுகின்றோம், நாங்கள் எப்போதும் அவர்களைப் பாதுகாப்போம்.

இன்றைய நாளில், கறுப்பு ஜூலையில் துயரத்தை சந்தித்த அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதில் நான் கனடாவின் பிரஜைகளுடன் இணைந்து கொள்கின்றேன் என்றுள்ளது.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை 27 இன் 2 கீழ் எதிர்க்கட்சி உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அத்துரலியே ரத்தன தேரர் தனது கேள்வியில், ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. அரசமைப்பின் 22ஆம் திருத்தத்தை ஜனாதிபதி கையில் எடுத்துள்ளதாலே இந்த சந்தேகம் எழுந்துள்ளது. அதேபோன்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது - என்றார்.

அதற்கு இராஜாங்க அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு ஆளும் தரப்பு எந்தவகையிலும் தடைகளை ஏற்படுத்தப்போவதில்லை. ஜனாதிபதி தேர்தலை நிச்சயமாக நடத்துவோம். இந்த மாதம் 17ஆம் திகதியுடன் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அது தொடர்பான அதிகாரம் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

அதனை நிறுத்த யாருக்கும் முடியாது. ஆளும் தரப்பு என்ற வகையில் தேர்தலுக்கு தேவையான பணத்தையும் வழங்கி இருக்கிறோம். அதனால் இந்த வாரத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறக்கூடிய திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பதாக தெரிவித்திருக்கிறது.

அதனால் ஜனாதிபதி தேர்தல் மிகவும் அண்மையில் இருக்கும் ஒரு திகதியில் இடம்பெறும் என்ற உறுதியை வழங்குறேன். அத்துடன் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு தற்போதைக்கு அவசியம் இல்லை. அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் 20 வரை நாடாளுமன்றத்துக்கான காலம் இருக்கிறது. என்றாலும் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரம் இருக்கிறது. அதனால் தற்போதைக்கு நாடாளுமன்றத்தை கலைக்கும் எண்ணம் ஆளும்தரப்புக்கு இல்லை.

மாகாணசபை தேர்தல் தொடர்பில் நான்கு வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் பிரேரணைக்கு அமைய விகிதாசார (பழைய) முறையில் தேர்தலை நடத்த நாங்களும் ஆதரவளிப்போம். என்றாலும் மாகாணசபை தேர்தல் தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பு மிக விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் செயற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருசில பிரிவுகள் பற்றிய திருத்தங்கள் முன்மொழியப்பட்டிருப்பினும், குழுநிலை விவாதத்தின்போது அவ்வாறான திருத்தங்களை சட்டமூலத்தில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை.

அதற்கமைய, குறித்த திருத்தங்களை உள்ளடக்கி 2024 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2024.02.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார்.

## முஸ்லிம்களிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் - 19 தொற்றுநோய்க் காலப்பகுதியில் சிகிச்சை முகாமைத்துவம் தொடர்பாக சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களில் குறிப்பிட்;டவாறு, வைரஸ்தொற்றுஏற்பட்டுஉயிரிழந்த ஆட்களின் பூதவுடல்களை அடக்கம் செய்வதற்கான பொறிமுறையாக உடற்தகன முறை விதந்துரைக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, கொவிட் - 19 தொற்றுக்குள்ளாகிய 276 முஸ்லிம்களின் பூதவுடல்கள் தகனஞ் செய்யப்பட்டுள்ளன. பின்னர் 2021 பெப்ரவரி மாதத்தில் அவ்வாறான நபர்களுக்கு மிகவும் மட்டுப்பாடுகளுடன் கூடிய நல்லடக்கத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2021 ஜூலை மாதத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் அப்போதிருந்த நீர் வழங்கல் அமைச்சால் ஆற்றுநீர், மருத்துவமனைகள், தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் ஏனைய இடங்களிலிருந்து வெளியேற்றப்படும் அசுத்தநீர் உள்ளிட்ட கொழும்பு கண்டி நீரியல் பிரதேசங்களில் நீபுயூறீ - ஸீநூ 2 வைரசை அடையாளங் காண்பதற்கான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. குறித்த ஆய்வின் பிரகாரம் மேற்புற நீரில் எவ்வித வைரஸூம் இல்லை என்பது கண்டறியப்பட்டது.

2024 மார்ச் மாதத்தில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் நீர் தொழிநுட்பத்திற்கான சீனா - இலங்கை ஒருங்கிணைந்து ஆராய்ச்சி மற்றும் மாதிரி நிலையத்தின் மூலம் இரண்டாவது கற்கையும் பூர்த்திசெய்யப்பட்டதுடன், அதன்மூலம் வைரஸ் நிலத்தடி நீர் உள்ளிட்ட நீர்மூலங்களுக்கு ஊடுகடத்தப்படும் அடிப்படை ஆற்றல்வளங்கல் மலம் மற்றும் சிறுநீர் மட்டுமே என்பது கண்டறியப்பட்டது, பாதுகாப்பான நல்லடக்கத்தின் மூலம் அது பரவாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, கொவிட் - 19 தொற்றுநோய்க் காலப்பகுதியில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாய உடற்தகனக் கொள்கையால் பாதிக்கப்பட்ட சமூகங்களிடம் இலங்கை அரசு மன்னிப்புக் கோருவதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்களும் இணைந்துசமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## தமிழரிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அண்மையில் எழுத்து மூலமாக அறிவுறுத்தியுள்ளேன். இச்சட்டம் குறித்து அரசியல் கட்சிகளுடனும், சுயாதீன தரப்பினர்களுக்கும் தெளிவுபடுத்துவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அரசியலமைப்பினால் தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் சுயாதீனத்துக்கு எதிராகச் செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படலாம்.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் போது உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டன. இவ்விடயம் குறித்து நீர்ப்பாசனத்துறை அமைச்சு அறிவியல் ரீதியில் முன்னெடுத்த ஆய்வு அறிக்கைக்கு அமைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட நான் ஒன்றிணைந்து கூட்டாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்பு கோரும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோருகிறோம். அத்துடன் கவலையடைகிறோம். - என்றார்.

## வங்கிகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகை 2024 ஆண்டு மார்ச் மாதமளவில் 571 பில்லியன் வரை அதிகரித்து 172% அதிகரிப்பைக் காட்டியுள்ளது. குறித்த நிலையை கருத்திலெடுத்து உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் அடகு முற்பணம் பெற்றுள்ள குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டிய தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, வாடிக்கையாளர்கள் தனிநபர் அடிப்படையில் 2024 ஜூன் மாதம் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் உரிமம் பெற்ற வங்கிகளில் பெற்ற முற்பணத்துக்கு வருடாந்தம் 10 சதவீத உச்ச எல்லைக்கு உட்பட்ட சலுகை வட்டியை திறைசேரியிலிருந்து வழங்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சம்பள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் நாளாந்த சம்பளம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2 சுற்று பேச்சுக்களிலும் முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை.

இந்தநிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை நிர்ணயித்து தொழில் ஆணையாளரால் கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து கடந்த மே மாதம் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா பன்றிகெய்தகுளம் பகுதியில் தனிநபரால் அரச காணி வழங்கப்படுவதற்கு மக்கள் எதிர்ப்பு

## மாவட்ட செயலகத்தில் திரண்ட மக்கள்





வவுனியா-பன்றிகெய்தகுளம்பகுதியில்தனிநபர்ஒருவரால் அரச காணி 16 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கு அப்பகுதி சமூக அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட அரதச அதிபரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

திங்கட்கிழமைவவுனியாமாவட்டசெயலாளர்பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் ஆகியோருடன் வவுனியா, பன்றிக்கெய்தகுளம் மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது, வவுனியா, பன்றிக்கெய்தகுளம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில்கூட பலர் காணியின்றி இருக்கும் போது வெளிமாவட்டத்தவர்கள் உள்ளடங்களாக புதிதாக 16 குடும்பங்களை எமது கிராமத்தில் குடியமர்த்த வெளிநாட்டில் இருந்து வந்து நிற்கும் தனிநபர் ஒருவர் முயற்சி செய்கின்றார்.

ஆளும்தரப்பால்வேறுநபர்களுக்குவழங்கப்பட்டகாணியை முறையான மாற்றீடு செய்யாது அரச காணியில் தனிநபர் தான் விரும்பிய குடும்பங்களை குடியமர்த்த முயல்கிறார். இதனை ஏற்க முடியாது. எமது மாவட்டத்தில் பலர் காணியில்லாது இருக்கின்ற நிலையில் வெளி மாவட்டத்தில் இருந்து மக்களை குடியமர்த்த முயல்வது பிழையான செயற்பாடு.

அடுத்து, எமது மாவட்டத்திற்கு என 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அனுமதி வழங்காது வேறு அரசியல்வாதிகள், வேறு மாவட்ட எம்.பிகள் எமது மாவட்டத்தில் குடியேற்றத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கியதாக குடியமர்த்தும் வெளிநாட்டு நபர் கூறுகின்றார். இதற்கு எமது மாவட்ட எம்.பிகளே முடிவு காண வேண்டும். இத்கு எமக்கு தீர்வு வேண்டும் என அவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இதன்போது, அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த காணி தனிநபரால் வழங்க முடியாது. அதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டது என இதன்போது மாவட்டஅரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதியளித்தனர் என பொது மக்கள் தெரிவித்தனர். (05)

## திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடு தொடர்பான பயிற்சிநெறி

யாழ்.மாவட்டத்தின் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், ஆசிரியர்களுக்கான திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடு தொடர்பான பயிற்சியானது ஜூலை 20 மற்றும் 21 திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனம், உலக மருத்துவ சுகாதார நிறுவனம் உதவியுடன், விசன்ஸ் குளோபல் எம்பவர்மன்ற் நிறுவனம் நடத்திய இப்பயிற்சியில், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 35 பேர் திறன்பலகையைகற்றல்-கற்பித்தல்செயல்பாடுகளுக்கு வினைத்திறன் மற்றும் விளைதிறனான முறையில் பயன்படுத்துவது தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனத்தின் திறன் பலகை வழங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் உள்ள திறன் பலகையை அதி உச்சமாக பயன்படுத்தி, நவீனத்துவமான கற்பித்தலை மாணவர்களுக்கு செயற்படுத்துவதற்கு உதவும் நோக்குடன் 10 பாடசாலைகளில் முன்மொழியப்பட்ட திறன் பலகையின்மேம்படுத்தப்பட்டபயன்பாடுதொடர்பான முதல் பயிற்சி, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் திறன் பலகையை பயன்படுத்தல், தேடு பொறி பயன்பாடு, ஆவணங்கள்மற்றும்காணொளிகளைப்பதிவிறக்கம் செய்தல், எளிமையான தட்டச்சு பயன்பாடு, கற்றல் மாதிரிகளை உருவாக்கல், காணொளிகளை உருவாக்கல், வினாத்தாள்களை உருவாக்கல் மற்றும்செயற்கை நுண்ணறிவு கருவிகள் பயன்பாடு ஆகியவற்றில் செயற்பாட்டு வழிப் பயிற்சியாக இப்பயிற்சி நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபரின் ஒழுங்கமைப்பில், பங்கேற்ற அனைவருக்கும் தனித்தனி கணனியை இணைய வசதிகளுடன் பயன்படுத்தும் வசதிகள் முன் ஆயத்தத்தோடு செய்யப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டது மிகச் சிறந்த முன்மாதிரி.

பயிற்சி பெற்ற 35 ஆசிர்யர்களுக்கும், தொடர் பயிற்சிகள் வழங்கி, அவர்களை பயிற்றுனர்களாக உருமாற்றிசாவகச்சேரிஇந்துக்கல்லூரியின்ஏனைய ஆசிரயர்களையும் பயிற்றுவிக்கும் செயல்திட்டம் அதிபர் தலைமையில் முன்மொழியப்பட்டதும் சிறப்பம்சமாகும்.

இப்பயிற்சியானது, மிகுந்த பயனுடையதாக இருந்ததாகவும், மேலும் தமக்கு இவ்வாறான பயிற்சிகள்தொடர்ந்துவழங்கப்படவேண்டும்எனவும் பயிலுனர்களால் வழங்கப்பட்ட பின்னூட்டலில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சியில், உலக மருத்துவ சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர்ராதாகிருஷ்ணன்,விசன்ஸ்நிறுவனத்தின் தலைவர் திரு.ந.தெய்வேந்திரராஜா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிருசாந்தன், சிவசெல்வன் மற்றும் செந்தூரன் ஆகியோர் வளவாளர்களாக பயிற்சியை முன்னெடுத்திருந்தனர். (05)

# சென் நெல் கிராமம் பிரதேச வைத்தியசாலை கட்டடம் உத்தியோகபூர்வமாக திறந்துவைப்பு.







(தில்சாத் பர்வீஸ்)

கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சென் நெல் கிராமம் பிரதேச வைத்தியசாலை கட்டடம் திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சென் நெல் கிராமம் பிரதேச வைத்தியசாலை அதிகாரி டாக்டர். எம்.டி. சரசி பிரதர்னா விஜயசூரியா தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்புவிழா நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ். நளீம் ஜனாப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்றஉறுப்பினர்பைசால்காசிமிடம் குறித்த வைத்தியசாலை தொடர்பாக இவ்வாறு தெரிவித்தார்;.





சம்மாந்துறை சென் நெல் கிராமத்தில் சுமார் 35 வருடமாக எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாமல் ஆரம்ப கட்ட வைத்தியசாலையாக இவ் வைத்தியசாலை காணப்பட்டது. இதனை 2018 ஆண்டு சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ். நளீம் ஜனாப் முயற்சியால் இராஜாங்க சுகாதார அமைச்சர் பைசால் காசிமிடம் வைத்த கோரிக்கைக்கு இனங்க இராஜாங்க அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் 2020 ஆண்டு இவ் வைத்தியசாலை கட்டப்பட்டது. அதன் பிறகு வைத்தியசாலையை தரமுயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையும், 24 மணிநேரம்இயங்கக்கூடியவைத்தியசாலை யாகவும் மாற்ற வேண்டும். - என்றார்.

இந்தக் கோரிக்கையை ஏற்ற ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சுகாதார உயர் அதிகாரிகள் இவ் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்றை எதிர்வரும் திங்கட்கிழமை பெற்றுத்தருவதாகவும், எதிர்வரும்காலங்களில்ஆண்கள், பெண்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான கட்டடம் ஒன்றை அமைத்து தருவதாகவும், 24 மணிநேரம் இயங்கக்கூடிய வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதாக வாக்குறுதி அளித்தார்.

இந்த நிகழ்வில் சுகாதார முன்னாள் ராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் உ.ஜி.எம்.கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை டாக்டர்.டி.பார்பசங்கர், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.நளீம் ஜனாப் , பொலிஸ் உயர் அதிகாரிகள், வைத்தியர்கள், சுகாதாரத்திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நினைவழியா நாட்கள்

நினைவுகளின் ஆழ அடுக்குகளில் இறுகிக் கிடக்கும் வடுவாக ஆழப் பதிந்து கிடக்கும் ஆடிக் கலவர நாட்கள் இவை. தமிழர்கள் தமக்கென்றொரு தனிநாட்டை அடைந்தே தீரவேண்டும் என்கிற கோபத்தை வேட்கையை ஏற்படுத்திய நாட்கள் அவை. வடக்கு கிழக்குத்தான் தமிழர்களின் தாயகம் என்று, அதுதான் இலங்கைத் தீவில் தமிழர்கள் வாழவேண்டிய இடம் என்று சிங்களப் பெருந்தேசியம் ஆணித்தரமாக எடுத்துரைத்த நாட்கள் அவை. அடுத்த 30 வருடங்களுக்கு ஆயுத வன்முறைகள் மூலம் தீவை குருதிச் சகதியில் தள்ளிவிடக் காரணமாக இருந்த நாள்கள் அவை.

1983 ஆடி 23 அன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இலங்கை அரச படையினர் பயணித்த வாகனத்தின் மீது தமிமீழ விடுதலைப் புலிகள் குண்டுத் தாக்குதலை நடத்தினர். இதில் 13 படையினர் கொல்லப்பட்டனர். ஆடிக் கலவரத்திற்குஇதுதான்காரணம்என்றுசொல்லப்பட்டாலும், இது தீப்பிடித்த தருணமே தவிர தமிழர்களுக்கு எதிராக சிங்களப் பெருந்தேசியத்திற்குள் கனன்றுகொண்டிருந்த பெரு நெருப்பின் திட்டமிட்ட வெளிப்பாடுதான் அது என்பது முழு உலகத்திற்கும் தெரியும்.

1983 ஆடி 24 இரவு, தலைநகர் கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரம் தொடங்கியது, பின்னர் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவியது. ஏழு நாட்களில், முக்கியமாக சிங்களக் கும்பல் தமிழரைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். உயிருடன் எரித்தனர், படுகொலைகளைப் புரிந்தனர், உடமைகளைக் கொள்ளையடித்தன. இறப்பு எண்ணிக்கை 400 முதல் 3,000 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்படுகின்றது. ஆனால் இன்று வரைக்கும் எந்தவித உத்தியோகபூர்வ அறிக்கையிடுதல்களும் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படவேயில்லை. 150,000 பேர் வீடற்றவர்களாயினர். ஏறத்தாழ 8,000 வீடுகளும், 5,000 வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. அதற்கும் நட்டஈடுகள் எவையும் கொடுக்கப்படவில்லை. இக்கலவரத்தின் போது ஏற்பட்ட மொத்தப் பொருளாதாரச் நட்டம் 300 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டது.

பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் என்ற அரச–சார்பற்ற அமைப்பு 1983 டிசெம்பரில் வெளியிட்ட அறிக்கையில் இப்படுகொலைகளை ஓர் இனப்படுகொலை என்று விவரித்தது. சிங்களத்தின் கொடூர முகத்தை அன்றைய உலகம் அறிந்துகொண்ட தருணமாக இருந்தது. அதனால் தமிழர்கள் மீது ஒரு பரிதாபத்தை பச்சாதாபத்தை உலகம் உருவாக்கிக் கொண்டது. இதன் விளைவாக, படுகொலைகளால் அச்சமடைந்திருந்த இலங்கைத் தமிழர்கள் பலர் அடுத்தடுத்த ஆண்டுகளில் வெவ்வேறு நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர், மேலும் ஏராளமான தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்ட இயக்கங்களில் சேர்ந்தனர். இந்தியா தனது பிராந்திய நலனைக் கருத்தில்கொண்டு அவர்களைப் பயன்படுத்திக்கொண்டது. ஆயுதங்களையும் பயிற்சிகளையும் கொடுத்து ஆயுத வன்முறைகளைத் தீவிரமாக்கிவிட்டது.

அதன் விளைவாக அடுத்து வந்த 30 வருடங்களை தமிழ் மக்கள் பேரழிவுகளுடனான போர்களின் ஊடாகவே கடக்க வேண்டியிருந்தது. 2009இல் மீண்டும் ஓர் இனப்படுகொலை இறுதிப் போர் என்ற பெயரில் வன்னியில் அரங்கேறியது. போர் முடிந்து 15 வருடங்களின் பின்னரும் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளாகத் தேங்கி நிற்கின்றது.

ஆடிக் கலவரங்கள் தமிழர் மனங்களில் ஏற்படுத்திய காயங்கள் ஆறாவடுவாக ஆழப்பதிந்ததன் விளைவுகளையே இன்னும் அகற்றமுடியாத நிலையில் இறுதிப் போர் ஏற்படுத்திய இன்னும் ஆழமான காயங்களும் ஆற்றுப்படுத்தப்படாமலேயே தொடர்கின்றன.



# உளவியல் ஆலோசனை ஏன் அவசியமாகிறது?

**பெ.சுப்பிரமணியம்**

மாணவர்கள், இளையோர் தொடர்பாக விபத்து, தற்கொலை, காதல் விவகாரம், அநாகரிகச் செயல்கள் குறித்து அண்மைக் காலமாக வெளியாகும் செய்திகள் கவலையைவிட அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளன. இவற்றுக்குக் காரணம், ‘கால மாற்றம்’ என்று ஒற்றை வார்த்தையில் கூறிவிடலாம். ஆனால் ‘ஏன் இந்த மாற்றம்? இதற்குத் தீர்வு என்ன?’ என்று பகுப்பாய்வதும் அவசியமாகும்.

முன்பெல்லாம் கூட்டுக் குடும்ப முறை, ஆசிரியர் - மாணவர் உறவு, மேலாளர் - பணியாளர் நட்பு மேலோங்கி இருந்ததுடன் உன்னதமாகவும் கருதப்பட்டது. தனிமனித சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள் எதுவாயினும் கலந்தாலோசித்தல் வழியாகவும் மனம்விட்டுப் பேசுதல் மூலமாகவும் தீர்வு காணப்பட்டது. ‘மூத்தோர்’, ‘பெரியோர்’ என்போரின் அதிகாரம் என்பது வணங்கத்தக்கதாகவும் மதிக்கத்தக்கதாகவும் இருந்ததால், தீர்வு எளிமையாக இருந்தது.

அதனால் அநாகரிகச் செயல்கள், மரபை மீறிய செயல்கள் என்பதெல்லாம் அரிதாக இருந்தது. அதையும் கடந்து மீறல்கள் என்பது அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தாலும் அறநெறிமுறைகள் பின்பற்றப்பட்டன.

கடந்த காலங்களில் படிக்கவும் வேலைக்குச் செல்வதற்குமான வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்கவில்லை. அதனால் அதிகமானோரிடம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் மனப்பான்மை இருந்தது. அதனைக் கருத்தில் கொண்டு அதிகாரத்தில் இருந்தவர்களும் முன்னுதாரணமாக இருந்தனர்.

இன்றைய வாழ்க்கை முறை இயந்திரமயமாகிவிட்டதுடன் புதிய மின்சாரக் கருவிகள், தொழில்நுட்பம், நுகர்வு கலாசாரம் ஆகியவற்றுக்காக இன்று பணம் சம்பாதிப்பது மட்டுமே வெற்றி என்ற எண்ணமும், அதையும் விரைவில் அடைய வேண்டும் என்பதைத் தவிர வேறெந்த லட்சியமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இத்தகைய நிலையில் தன் உணர்வுகளை அறிந்துகொள்ளும் மனப்பக்குவமோ, உறவுகளைப் புரிந்துகொள்ளும் முயற்சியோ, நல்லோர் சொல் கேட்டு வழிநடத்தலோ எல்லா இளைஞர்களுக்கும் வாய்த்துவிடுவதில்லை.

அதிகரித்துவரும் அநாகரிகச் செயல்களே இதையெல்லாம் வெளிப்படுத்துகிறது. பாடம் கற்றுத்தரும் ஆசிரியர் மீது தாக்குதல், தேர்வுக்குப் பயந்து தற்கொலை, சக மாணவ, மாணவியரிடம் சீண்டல், சிறு பிரச்னைக்குக்கூட தீர்வு காண முடியாமல் துவண்டு போவது என்பதெல்லாம் இன்று சாதாரண நிகழ்வாகிவிட்டன.



கடந்த காலங்களில் ஓ.எல். மற்றும் ஏ.எல். போன்ற பொதுப் பரீட்சை முடிவுகள் வெளியான பின்னர் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காதபட்சத்தில் ஏதோ மாணவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது பதிவாகி வருகின்றது.

பாடசாலை மாணாக்கர்கள் கூட மன அழுத்தத்திற்கு ஆளாகும் நிலையே உள்ளது. இவற்றுக்கெல்லாம் உளவியல் சார்ந்த கல்விதான் தீர்வாக அமையக்கூடும். பாடசாலை, கல்லூரி பாடத் திட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும் எனவும் பாடத் திட்டத்தில் உளவியலைச் சேர்க்கவேண்டும் எனவும் பல தரப்பினர் குரல் கொடுத்து வருகின்றனர்.

கருவிகளால் சூழப்பட்ட, அவசரமான, வேகம் நிறைந்த இன்றைய உலகில், மனநலன் குறித்த விழிப்புணர்வுக்கான தேவை அதிகரித்துக்கொண்டே வருகிறது என்றால் அது மிகையல்ல. பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் செயல்பாடுகளால் மனநலம் குறித்த உளவியலை ஒரு பாடமாக வைக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. பெரு நிறுவனங்கள், அலுவலகங்களில் பணிபுரிவோருக்கும் மனநலம் குறித்த விழிப்புணர்வு அவசியமாகி வருகிறது.

ஆசிரியர் - மாணவர், மேலாளர் - பணியாளர் என இரு நிலைகளும் மன உளைச்சலுக்கு உள்ளாகி வருகின்றன. இவ்விரு நிலைகளுக்குமான காரணங்கள் படிப்பு, பணி என வேறாக இருக்கலாம். ஆனால் பிரச்சினை என்னவோ ஒன்றுதான். முன்பு, ஆசிரியராகவோ, மேலாளராகவோ உயர்நிலையிலிருந்து யார் தண்டித்தாலும் அதை இயல்பாக எடுத்துக்கொள்வதும் அதன் மூலம் தம்மைத் திருத்திக் கொள்வதும் இருந்தது.

இந்த உறவு இடர்களுக்கெல்லாம் உளவியல் ரீதியிலான ஆலோசனைகளும் உரையாடல்களுமே தீர்வாக அமையும். மனித வாழ்வுடன் உளவியல் என்பது காலங்காலமாக தொடர்புகொண்டுள்ளது என்றாலும், இன்றைய வாழ்க்கை முறையில் உளவியலின் தேவை அதிகரித்து வருகிறது. உளவியலின் தனிச்சிறப்பு என்பது ஒவ்வொரு துறையிலும் அது பொருத்தமானதாக இருப்பது என்பதால் பாடசாலை, பல்கலைக்கழகங்கள் அலுவலகங்கள் என்று பல்துறைகளிலும் உளவியல் ரீதியான ஆலோசனைகள், உரையாடல்கள் சாத்தியம்.

போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு கிழக்கு மக்களுக்கு உளவளத் துணை அதிகம் தேவைப்பட்டது. எனினும் ஆளும் தரப்புகள் அதில் நாட்டம் காட்டவேயில்லை. நம் நாட்டு மக்கள்தொகையின் அடிப்படையில், வரும் காலங்களில் ஆயிரக்கணக்கான உளவியல் வல்லுநர்கள் தேவைப்படுவர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அவர்களை உருவாக்குவதற்குப் போதுமான உளவியல் வல்லுநர்களோ, ஆசிரியர்களோ போதுமான அளவில் இல்லை.

இந்நிலையில், முதல் முயற்சியாக, உரையாடல் திறன் வளர்க்கும் உளவியல் பயிற்சியை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் வழங்கலாம். ஒரு நல்ல உரையாடல் பல வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கும் திறன் கொண்டது.

உறவுச் சிக்கல்கள் சிறு பொறியாக இருக்கும்போதே அணைத்துவிடுவது நல்லது. இல்லையென்றால் அது பெருநெருப்பாக மாறிவிடும்.

கோபமும் அதிகாரக் குரலும் தற்காலிகத் தீர்வாகவே இருக்கும். ஆனால் உளவியல் ரீதியிலான சின்னச்சின்ன உரையாடல்கள் நாளடைவில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் நிரந்தரத் தீர்வாகவும் அமையும்.

காலைக்கதிர் Kalaikkathir

# மாளிகைக்காடு பிரதேசத்தில் மர ஆலை ஒன்றில் தீ விபத்து

## கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த கல்முனை மாநகர சபை



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேசசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் உள்ள மர ஆலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், மரம் அறுக்கும் ஆலை தீப்பற்றியதுடன் மரங்களில் சிலவும் எரிந்து சாம்பராகி உள்ளன.

திங்கட்கிழமை மாலை குறித்த மர ஆலையில் தீ பரவியதுடன், பிரதேசவாசிகள் மற்றும் கல்முனை மாநகரசபையின் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளது. இந்த தீ விபத்து மின்கசிவு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனவும், இதன் போது உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை என குறிப்பிடப் பட்டுள்ளது. (05)





# விவசாய அமைப்புக்கான கட்டடம் வடக்கு ஆளுநரால் திறந்து வைப்பு



வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் விவசாய அமைப்புக்கான கட்டடம் வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சாள்ஸால் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

குறித்த கட்டடம் வடமாகாண ஆளுனரால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டு விவசாய சங்கத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வின் நினைவாக மரநடுகையும் இடம்பெற்றது.

அத்துடன், சிங்கப்பூர் பௌத்த சங்கத்தின் நிதி உதவியில் ஈரப்பெரியகுளம் விவசாயிகளுக்கு 2000 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து, பயறு, கௌப்பி ஆகிய தானிய செய்கை மேற்கொள்வதற்கான உதவித் திட்டம் வழங்குவதற்கான செயற்பாடுகளும் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

இந்த எநிகழ்வில் சிங்கப்பூர் பௌத்த சங்கத்தினர், மதத்தலைவர்கள், சுகாதார பரிசோதகர்கள், பாடசாலை மாணவர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05 - 100)






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Paneer & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பாடசாலை பாதுகாப்பு வேலியை உடைத்து சேதப்படுத்தியது காட்டு யானைக் கூட்டம்



புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட கொலஎலிய பாடசாலையினுள் அத்துமீறி நுழைந்த காட்டு யானைக் கூட்டம் பாடசாலையின் நுழைந்து அவற்றை சேதப்படுத்தி பின்னர் பாடசாலையின் பாதுகாப்பு வேலியையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளதாக பிரதேசவாசிகள்



பாதுகாப்பு வேலியை உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை இடம்பெற்றது.

இந்த காட்டு யானைகள் கூட்டமானதுதென்னைஉள்ளிட்ட தோட்டங்களுக்குள் அத்துமீறி தெரிவித்துள்ளனர்.

இந்த காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாகக் கிராமப் புறங்களில் சுற்றித் திரிவதால் மக்கள் பெரும் அச்சத்துடன் இருப்பதாக பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(05)

# சாய்ந்தமருது கலாசார நிலையத்தில் பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த பாராட்டு மற்றும் கௌரவிப்பு ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ. பீர்முகமது, சட்டமுதுமாணி, சட்டத்தரணி சஹ்பி எச். இஸ்மாயில் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ரீ. எம். ரின்சான், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். ரம்ஸான், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர், பிரதேசசெயலககலாசார உத்தியோகத்தர்களானஏ.எச். சபீகா, ஏ.எம். தௌபீக், அக்கரைப்பற்று கலாசார மத்தியநிலையப்பொறுப்பதிகாரிஐ.எல். ரிஸ்வான், பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத் தர் ஏ.சீ.முஹம்மத், பிரதேச செயலக நிதி உதவியாளர் ஏ.சீ.றியாஸ், கலாசார மத்திய நிலைய நிறைவேற்றுக் குழு குழு உறுப்பினர்களான ஓய்வுபெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப், ஆசிரியர் எம்.ஐ. எம். அமீர், மூத்த கலைஞர் எம். ஐ. அலாவுதீன் மற்றும் மத்திய நிலையத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளர் ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர், மத்திய நிலைய அபிவிருத்தி சங்க செயலாளர் அஸ்வான் மௌலானா, பொருளாளர் ஏ.பி. நௌசாத் உட்பட கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மத்திய நிலைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் ஹஸீதா மற்றும் சிறுமிகளின் பரத நாட்டியம் உட்பட பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளும் மேடையில் அரங்கேற்றப்பட்டதோடு, கடந்த வருடம் கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, பாராட்டு கௌரவம், நினைவுச் சின்னம் வழங்கும் வைபவங்களும் இடம்பெற்றன.

இதன் போது சுமார் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள்சான்றிதழ்களைப்பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில், முக்கிய அம்சமாக சாய்ந்தமருதில் பிரதேச செயலாளராக இருந்து ஊரின் நலன் கருதி, தன்னலம் பாராது சேவையாற்றி அரும் பணியாற்றிவரும் சேவைச் செம்மல் பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸானினால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மிகக் குறுகிய காலத்தில் சாய்ந்தமருதில் கலாசார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலும் அதில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் சித்திரம், நடனம் போன்ற பாரம்பரிய கலாசார பாட நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டு, அதில் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் நன்மையடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## சம்பள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் ஆர்.பீ.ஏ.விமலவீர மற்றுமொரு அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டிருந்தார்.

இந்த வர்த்தமானியில் பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும் விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கமைய, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த மொத்தக் கொடுப்பனவாக 1,700 ரூபா கிடைக்கும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார்.

மேலதிக கொழுந்து கிலோ கிராம் ஒன்றுக்கு 80 ரூபா வீதம் வழங்கப்படவேண்டுமெனவும்அவர் மே மாதம் 21ஆம் திகதி வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் கடந்த மே மாதம் 21ஆம் திகதி தம்மால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இரத்து செய்யப்படுவதாக தெரிவித்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சின் செயலாளர் ஆர்.பீ.ஏ.விமலவீர மற்றுமொரு அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

தேயிலை மற்றும் இறப்பர் ஆகிய தொழில்துறைகளின் தொழிலாளர்களது குறைந்தபட்ட நாளாந்த கொடுப்பனவு தொடர்பில் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிஇரத்துசெய்யப்படுவதாக அவர் தனித்தனியாக 2 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தஆண்டுகலைக்கப்படமாட்டாது.

அத்துடன், நாடாளுமன்றத் தேர்தலை இலக்காக கொண்டு எந்த அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்பிக்கப்படுவதில்லை. முன்னர்நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

## இறுதிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொவிட் வைரஸ் நிலத்தடி நீர் உள்ளிட்ட நீர்மூலங்களுக்கு ஊடுகடத்தப்படும் அடிப்படை ஆற்றல்வளங்கல் மலம் மற்றும் சிறுநீர் மூலமாகவே மாத்திரமே பரவுவதுடன், பாதுகாப்பான நல்லடக்கத்தின் மூலம் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால்,எதிர்வரும்காலங்களில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஏதேனுமொரு ஆளுக்கு அல்லது உறவினருக்குதமது சுயவிருப்பின் பிரகாரம் உயிரிழந்தவர்களின் உடலைநல்லடக்கம்செய்வதற்கோ அல்லது தகனஞ் செய்வதற்கான தெரிவுக்கு இடமளிக்கும் வகையில் சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தேவையாயின் மருத்துவ பீடங்களுக்கு உடலங்களைவழங்குவதற்குமான சட்டத்தை அறிமுகப்படுத்துவதும் பொருத்தமானதெனக் கண்டறியப் பட்டுள்ளது. அதற்கிணங்க, புதிய சட்டத்தைஅறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றைத்தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்மற்றும்அயலுறவுத்துறை அமைச்சரும்இணைந்துசமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளது-என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சம்பளத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

saecShpresidentsoffice.lkஎன்ற உத்தியோகபூர்வ முகவரிக்கு 09-08-2024ஆம் திகதி அல்லது அதற்கு முன் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

முன்மொழியப்பட்ட பதவியைத் தவிர வேறு பதவிகளுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிப்பதாக இருந்தால், அவற்றுக்குத் தனியான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணைய தளமான www.presidentsoffice.gov இலிருந்து பதிவிறக்கம் செய்து இணைப்பு 01 மாதிரிப் படிவத்திற்கு அமைவாகநியாயமானகாரணங்கள் அடங்கிய அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட தகவல்களின் மென்பிரதிகளைமட்டும்வழங்குவது போதுமானது. 'செயலாளர், அரச சேவை சம்பள முரண்பாடுகளை நிவர்த்திக்கும் நிபுணர் குழு, ஜனாதிபதி செயலக அலுவலகம், காலி முகத்திடல், கொழும்பு 01' என்ற முகவரிக்கு 09.08.2024 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில்அனுப்பவேண்டும்.அல்லது நேரில் கையளிக்க வேண்டும்.

இந்த அனைத்துப்பரிந்துரைகள் தொடர்பாகவும் நிபுணர் குழுவால் ஆய்வு செய்யப்படும் மற்றும் விண்ணப்பதாரரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனம்/ தொழிற்சங்கம்/சிவில்அமைப்புடன் கலந்துரையாடுவதற்காக கால அவகாசம் வழங்கப்படும். இது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு மின்னஞ்சல் அல்லது வாட்ஸ்அப் மூலம் இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்படும்.

நிபுணர் குழு இந்த முன்மொழிவுகள் மற்றும் நியாயப்படுத்தும் அறிக்கை என்பவற்றை ஒரு பக்கத்திற்கு மட்டுமே வரையறுக்க வேண்டும் என்றும் குழு கோரியுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## முருகனை தரிசித்த மஹிந்த ராஜபக்ச





150 ஆவது வருட ஆடிவேல் வெள்ளிரதபவனியில் எழுந்தருளிய முருகப்பெருமான் பம்பலபிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் அமர்ந்திருந்து அருள் கொடுக்கும்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ வருகைதந்து வழிபடும்போது ஆலய தர்மகர்த்தா ராஜேந்திரசெட்டியார் பொன்னாடைபோர்த்தி கௌரவிப்பதையும் குருமார்கள் ஆசி வழங்குவதையும் காணலாம். (05)

## ஆலயம் சென்றவர் சடலமாக மீட்பு

### மட்டக்களப்பில் சம்பவம்



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை காட்டுப் பகுதியில் இருந்து நபர் ஒருவரின் சடலம் நேற்று (செவ்வாய்கிழமை) மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச் சோலை பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

39 ஆம் கிராமம், செல்வாபுரத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான செல்வநாயகம் லிங்கேஸ் என்பவரேஇவ்வாறுசடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த ஞாயிறுக்கிழமை தனது வீட்டிலிருந்து தாத்தாமலை முருகன் ஆலயத்திற்கு சென்றவர் வீடு திரும்பாத நிலையில் குடும்பத்தினர் ஆலயத்தை அண்டிய பகுதியில் அவரை தேடிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் கால்நடைகளை பராமாரிப்பதற்கு சென்று ஒருவர் காட்டின் மலைப் பகுதியில் சடலம் ஒன்றுகாணப்பட்டதாகதகவல் வழங்கியதன் அடிப்படையில் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரின்பணிப்புரைக்கு அமைவாக, மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் திடீர்மரணவிசாரணைஅதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டபின் உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத் துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தி.யில் 3 மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதுஅல்- ஹிலால் வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் மற்றும் பெட்மிண்டன் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) பாடசாலையில் இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற





உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸின் முயற்சியால் நாடாளுமன்ற உறுப்பினரின் டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் பேண்ட் வாத்தியம் முழங்க, சிரேஷ்ட அண்ணாவியார் கலாபூஷணம் ஏ. இஸ்ஸதீன் தலைமையிலான பாரம்பரியக் கலையான பாடசாலையின் பொல்லடி மாணவக் குழுவினரின் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டு, அதிதிகள் வரவேற்கப்பட்டனர்.

வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து அடிக்கல் நாட்டி வைத்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ. எம். சாஹிர், கல்முனை வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யூ.எல். றியால், எம்.எம். முதர்ரிஸ், அஸ்மா மலிக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின்



அதிபர் எம்.ஐ. ஜாபிர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ. வாவா, பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத் உட்பட அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.(05)

# கிண்ணியா வானாறு புகாரி வித்தி வெண்கலப் பதக்கம் வென்றது





( எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியாவானாறு புகாரி மகா வித்தியாலயம் 18 வயதின் கீழ் மாணவர்கள் மாகாண மட்ட வலைப் பந்தாட்டத்தில் வெண்கலப் பதக்கத்தை சுவிகரித்துள்ளனர்.

இதனால் எதிர்வரும் ஒன்பதாம் மாதம் நடைபெற இருக்கின்ற இலங்கை பாடசாலை மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மானவர்களின் வெற்றிக்கு உதவிய பாடசாலையின் அதிபர் ஜாபீர், உதவி அதிபர் சஜீட் பாடசாலையின் விளையாட்டு ஆசிரியர் அயாஸ், பாடசாலையின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் வாஹிட், நௌஸாத், பாடசாலை ஆசிரியர்களுக்கும், வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்தது.(05)

# அரசியல் தெளிவற்றவர்களாக அம்பாறை மக்கள் உள்ளார்கள்

## ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவிப்பு





(எஸ்.கார்த்திகேசு)

அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசியல் மற்றம் அபிவிருத்திப் பணிகளை பெற்றுக் கொள்வதில் பின்னடைவுகளை ஏதிர்கொண்டு வருகின்றனர். இதற்கு காரணம் அவர்கள் அரசியலில் தெளிவற்றவர்களாக காணப்படுவதே என்றுதாம்கருதுவதாககிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அம்பாறைமாவட்டம்திருக்கோவில் பிரதேசசெயலகத்தில்பிரதேசசெயலாளர் தங்கையா கஜேந்திரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற அரச உதவிகள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி கருத்தைத் தெரிவித்து இருந்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோர் இருக்கின்றார்கள் நுவரெலியா மாவட்டத்தில்வாழும்தமிழ்மக்களுக்கு நாம் இருக்கின்றோம். யாழ்பாணத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருக்கின்றார்.

ஆனால் அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு தேவையான அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு எந்த அமைச்சரும் இல்லை. நீங்கள் என்ன பாவம் செய்தீர்கள் ஒவ்வொரு முறையும் உங்கள் வாக்குகளை அளிக்கின்றபோதும் ஆனால் உங்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்கவில்லை. இதனால் நீங்களும் உங்கள் பிரதேசமும் தான் நஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றீர்கள்.

பொத்துவில் கனகர் கிராம மக்களின் காணிப் பிரச்சினையானது சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இருந்து வந்த போதும் அதனை யாராலும் தீர்த்து வைக்க முடியாத நிலையில் நான் வந்து ஒருநாளில்தீர்த்துவைக்கமுடியுமானால் உங்கள் பிரதிநிதி ஒருவர் அரசுடன் இருந்திருந்தால் எப்போதே தீர்த்து வைத்திருக்க முடியும். நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் என்னைப் பொறுத்தமட்டில் அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசியலில் தெளிவு இல்லாமல் இருப்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது என அவர் மேலும் தெரிவித்து இருந்தார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான டபிள்யூ. டீ. வீரசிங்கவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக ஆலயங்கள் பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புகளுக்காக சுமார் 10 லட்சம் ரூபா நிதி உதவிகள் மற்றும் பொருள்கள் வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்று இருந்தது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்க, உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.நிருபா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் அனோஜா உஷாந், நாடாளுமன்ற உறுப்பினரின் மாவட்ட பிரதேச இணைப்பாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(05)

# யாழ். பருத்தித்துறையில் வன்முறை: மூவர் காயம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் இடம்பெற்ற வன்முறை சம்பவம்ஒன்றில்மூவர்படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

காயமடைந்த மூவரில் இருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி வெட்டு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மற்றையவர் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதில் காயமடைந்துள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசிரியர்களின் பற்றாக்குறையைக் கண்டித்து பெற்றோர் பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டம்



வவுனியாஉலுக்குளம்ஸ்ரீசுமனவித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதன் காரணமாக மாணவர்களுக்கு கற்றல் செயல்பாடுகள் போதிய அளவில் நடைபெறுவதில்லை எனவும் தெரிவித்து பெற்றோர்கள் பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆசிரியர்களை நியமிக்க கோரியும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாத வகையில் செயற்படக் கோரியும் பதாகைகளை தங்கி இருந்தனர்.



சுமார் ஒன்றரை மணி நேரமாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல பெற்றோர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# மருகிவரும் கலைஞர்களின் கலைநிகழ்வுகளும் உரையாடலும் மட்டக்களப்பில் இடம்பெற்றது



(எம்.எப்.றிபாஸ்)

கிழக்கின்அகல்இளையோர்மற்றும் விழுது நிறுவனம் இணைந்து நடத்தும் 'ஓரங்கட்டப்பட்டு மருவி கலைஞர்களின் வெளிக்கொணர்வதற்கான கலை நிகழ்வும், உரையாடல்களும் மட்டக்களப்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவகத்தில் விழுது நிகழ்ச்சி திட்ட அதிகாரி திருமதி இந்துமதி ஹரிகரதா மோதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம், பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விழுது அமைப்பின் சிரேஷ்ட உத்தியோகத்தர் பாலசிங்கம் முரளிதரனின் வரவேற்புடன் ஆரம்பமான இவ்நிகழ்ச்சியில் கிழக்கின் அகல் இளைஞர் குழுவினரின் இரு தசாப்த காலபயணம்,மறுமலர்ச்சிநாட்டுக்கூத்து படைப்பு, ஓரங்கட்டப்பட்டு மருவிவரும் கலைஞர்களின்சவால்களும்சமூகத்தில் அவர்களுக்கான அங்கீகாரங்களும் என்னும்தலைப்புக்களின்நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் நாட்டார் பாடல்கள், பாறை இசை, ஆதிவாசிகளின் பாரம்பரிய கலை படைப்புக்களும் நடைபெற்றன.(05)

# என்னை படுகொலைசெய்ய இராஜாங்க அமைச்சர் சதி

## விசாரணைகளை முன்னெடுங்கள் என்கிறார் சாணக்கியன்



என்னை படுகொலை செய்வதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் சதி செய்கிறார் என இணையத்தள செய்தி சேவை ஒன்றில் வெளிநாட்டு புலனாய்வுஅமைப்பைமேற்கோள்காட்டி வெளியிடப்பட்டுள்ள செய்தி குறித்து பாதுகாப்பு தரப்பினர் உரிய நடவடிக் கைகளை முன்னெடுக்க வேண்டும்.

பெயர்குறிப்பிடப்பட்டுள்ளநபர்மனித படுகொலையுடன் தொடர்புடையவர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்சாணக்கியன் இராசமாணிக்கம் சபையில் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

என்னை படுகொலை செய்வதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் சதி செய் வதை வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவொன்று கண்டுபிடித்துள்ளதாக தனியார் இணையத்தள செய்தித் சேவை கடந்த 20 ஆம் திகதி செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தசெய்தியின்உண்மைதன்மை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அச்செய்திபாரதூரமானது. இந்தவிடயம் தொடர்பில் நான் சபாநாயகருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

என்னை படுகொலை செய்வதற்கு சதி செய்வதாக கூறப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை படுகொலைசெய்தமை மற்றும்உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இந்த செய்தி தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகரிடம் வலியுறுத்துகின்றேன். - என்றார். (05)

# தோழியின் ஏ.ரி.எம். அட்டையைத் திருடியபின் பணத்தை பெற்ற காதலனும் காதலியும் கைது

தோழியின் ஏ.ரி.எம் அட்டையைத் திருடி 310,000 ரூபா பணத்தைப்பெற்றதாகக் கூறப்படும் 18 வயதுடைய யுவதியும் யுவதியின் காதலனும் கடந்த 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக அஹுங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபரான யுவதி கடந்த 20 ஆம் திகதி தனது தோழியின் வீட்டிற்குச் சென்றுள்ள நிலையில் இருவரும் இணைந்து நகரத்துக்கு சென்றுள்ளனர்.

இதன்போது, யுவதியின் தோழி தனது ஏ.ரி.எம் அட்டையைப் பயன்படுத்தி 10 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று ஏ.ரி.எம் அட்டையை தனது கையடக்கத் தொலைபேசியின் அட்டைக்குள் வைத்துள்ளார்.

இதனை அவதானித்த யுவதி, புகைப்படம் எடுப்பதாகக் கூறி தனது தோழியின் கையடக்கத் தொலைபேசியை பெற்றுக்கொண்டு அதிலிருந்த ஏ.ரி.எம் அட்டையைத் திருடியுள்ளார்.

பின்னர்,இருவரும்தங்களதுவீட்டிற்குச்சென்றுள்ள நிலையில், யுவதியின் தோழி தனது ஏ.ரி.எம் அட்டை காணாமல் போயுள்ளதை அறிந்துள்ளார். பின்னர் யுவதியின் தோழி, யுவதியின் வீட்டிற்குச் சென்று அவரது பையை சோதனையிட்ட போது தனது ஏ.ரி.எம் அட்டையைக் கண்டுபிடித்துள்ளார்.

இதனையடுத்து, யுவதியின்தோழிஇதுதொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ள நிலையில், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் திருடப்பட்டதாகக் கூறப்படும் 310,000 ரூபா பணம் யுவதியின் காதலனிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கேதீஸ்வரத்தில் இரு பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவைப்பு

## இணைந்த கரங்கள் அமைப்பால்










(வி.ரி.சகாதேவராஜா)

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரம் இந்து சமய தமிழ் கலவன் பாடசாலை மற்றும் மினுக்கன் அரசினர் முஸ்லீம் பாடசாலை ஆகிய இரு பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் 45 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வு பாடசாலையின்அதிபர். பி.சே. தட்குருஸ் தலைமையில் இடம்பெற்றது.

'ஏழ்மையைஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பலகஸ்ர பிரதேசங்களில் உள்ள பாடசாலைமாணவர்களுக்கு கடந்தஇரண்டுவருடங்களாக வழங்கிவருகின்றது .

மேலும்இப்பாடசாலைகள் கடந்த காலங்களில் யுத்ததித்தால் பாதிப்படைந்த பாடசாலைகளாகும்.

இணைந்த கரங்கள் இலங்கையில் இன, மதம் மொழி பாராமல் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்மற்றும்மேலதிக கல்வி செயற்பாட்டிற்காண நிதி உதவியை வழங்கி வருகின்றது.

மேலும் இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட வலயக் கல்வி அலுவலகத்தில் ஆசிரிய வாண்மை விருத்தி முகாமையாளர் சோமஸ் பெரேறா,இருபாடசாலையின் ஆசிரியர்கள், இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான, காந்தன், சுரேஸ்விவேக், ஆனந்தன்ஆகியோர்கலந்து கொண்டனர்.

45 மாணவர்களுக்கான பாடசாலைக்கு செல்வதற்கு தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பவற்றை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# காட்டு யானைகள் அட்டகாசம்: மக்கள் வாழ்வாதாரம் பாதிப்பு



கண்டாவலைப்பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள சம்பு குளம் மற்றும் நாவல் நகர் பகுதியில் தொடர்ச்சியாக இரவு வேலைகளில் மக்கள் குடியிருப்புகளில் வரும் யானைகள் மறுநாள் அதிகாலை 7 மணி வரை மக்கள் குடியிருப்புகளில் இருக்கும் வாழ்வாதாரங்களை தொடர்ச்சியாக அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் இதன் காரணமாக தனிமையில் இருப்பவர்கள் மற்றும் முதியவர்கள் தமது வீடுகளை விட்டு இரவு வேளைகளில் அயல் வீடுகளில அவர்கள் தஞ்சமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் தெரிவிக்கையில் -

நேற்று (செவ்வாய்க்கிழமை) மக்கள் குடியிருப்புகளில் புகுந்த காட்டு யானை ,20இற்;கும் மேற்பட்ட தென்னை மற்றும் 40இற்கும் மேற்பட்ட வாழைகளை முற்றும் முழுதாக அழித்து பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது. இப்பகுதிகளில் தொடர்ச்சியாக மக்கள் வாழ்வாதாரம் வைப்பதும் யானைகள்; அழிப்பதும் தொடர்ச்சியாக இப்பகுதிகளில் நடைபெற்றுவரும்செயலாக உள்ளது. இதன்காரணமாக யானையை துரத்துவதற்காக முயன்ற மக்களை மீண்டும் யானை துரத்தி உள்ளது. இதன் போது ஒருவரது வீட்டு கதவை கூடயானை உடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



எனவேஇப்பகுதியில்வாழும்மக்கள் தொடர்ச்சியாக காட்டு யானைகளை பாதிக்கப்படுகின்றனர் எனவும் தமது பகுதிக்கு நிரந்தரமான ஒரு யானை வேலியை அமைத்துத் தந்து எமது மக்களின்உயிர்களைகாப்பாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வர வேண்டும் என இப்பகுதியில் வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர். (05-113)

# ஏ – 9 வீதியில் பலத்த காயத்துடன் ஆண் ஒருவரின் சடலமாக மீட்பு



கண்டி - யாழ்ப்பாணம் ஏ9 வீதியில் திறப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பலத்த காயங்களுடன் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் அநுராதபுரம், மிஹிந்தலை பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

சடலமாக மீட்கப்பட்டவர்மெல்சிரிபுர பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணியாற்றி வரும் நிலையில், தனது பணியை முடித்து விட்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகி உயிரிழந் துள்ளார்எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் வாகன மொன்றில் பயணிக்கும் போது கீழே தவறி வீழ்ந்து உயிரிழந்தாரா அல்லது வீதியில் பயணிக்கும் போது வாகன மொன்று மோதி உயிரிழந்தாரா என்பது தொடர்பில்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05

# திருக்கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் என்பு முறிவு கிளினிக்

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் என்பு முறிவு கிளினிக் நடத்தப்படவுள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.கலாவேந்தன், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் நிர்வாகமும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இக் கிளினிக்கை நடத்த முன்வந்துள்ளார்.

அதன் முதலாவது கிளினிக் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

அக்கரைப்பற்று தொடக்கம் பொத்துவில் வரையிலான பெருநிலப்பரப்பில் வாழும் மக்களின் நன்மை கருதி திருக்கோவில் ஆதார வைத்திய சாலையில் என்பு முறிவு கிளினிக் ஆரம்பித்து வைக்க உள்ளார்,

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நோயாளிகள் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை, திருக்கோவில் பிரதேச பொது மக்களுக்கு வைத்தியசாலை நிருவாகம் அறிவித்துள்ளது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.07.2024இல் வெளியிடப்பெற்றது